**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 60/2024**

**Prosecution Witness : 16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. வெள்ளையப்பன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சின்ன எழுவன்** | **Calling** | : | **காவல் ஆய்வாளர், சிறப்பு நுண்ணறிவு பிரிவு, திண்டுக்கல்** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **50** |
| | | | **Dated** | : | **18.09.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜர்.**

அ.சா. 16 (பட்டியல் சாட்சி 20), **திரு. வெள்ளையப்பன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், சிறப்பு நுண்ணறிவு பிரிவில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2023ம் வருடம் கன்னிவாடி காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக பணியாற்றினேன். 06.08.2023ம் தேதி 18.00 மணியளவில் கன்னிவாடி காவல் நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் அவர்கள் முதல் விசாரணை செய்து, மேல் விசாரணைக்காக கன்னிவாடி காவல் நிலைய குற்ற எண். 151/2023, இ.த.ச. பிரிவுகள் 294(b), 304(ii) ன் கீழ் பதிவு செய்த வழக்கினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, அன்றைய தினமே சம்பவ இடம் 18.30 மணிக்கு சென்று, பார்வை மகஜர்

சாட்சிகள் சரவணக்குமார், ஆகாஷ், சாட்சிகள் கீதா லோச்சனி, சரவணன், செல்வக்குமார், ஜெயராணி, செந்தில்குமார் ஆகியோர்களை விசாரணை செய்தேன். ஏற்கனவே காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் அவர்களிடம் சொன்னது போலவே சொன்னபடியால், தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. சாட்சி கிருஷ்ணன், முத்துலெட்சுமி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் திரு. செந்தில்குமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரியை தேடிச் சென்று கண்காணித்ததில் 06.08.2023ம் தேதி 20.00 மணிக்கு கொட்டாரப்பட்டி பிரிவு அருகே இந்த வழக்கின் எதிரி ராஜா, வயது 37, த/பெ. தெய்வம், பசும்பொன் தெரு, மம்சாபுரம் முதல் தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம் என்பவரை கைது செய்து 20.10 மணிக்கு சாட்சிகள் ராஜேந்திரன், மாயாண்டி ஆகியோர் முன்னிலையில் மேற்படி எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளிடமும், எதிரியிடமும் கையொப்பம் பெற்றேன். 21.30 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்த போது, எதிரி ராஜாவிற்கு உடம்பில்

1) வலது பக்க தோள்பட்டை,

2) நெற்றியின் மத்தியில்,

3) இடது கன்னத்திற்கு கீழ்,

4) வலது காதின் பின்புறம்,

5) இடது தோள்பட்டையில் காயங்கள் ஏற்பட்டு இருந்தது. எதிரியடம் காயத்தின் தன்மை குறித்து கேட்டதற்கு, எதிரி ராஜா அவரது மைத்துனர் புகழ்நாதனுடன் சண்டையிட்டதில் நகக்கிறல் ஏற்பட்டதாக சொன்னார். அதன்படி எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு,

நீதிமன்ற காவலுக்கு தக்க வழிக்காவலுடன் அனுப்பி வைத்தேன். 07.08.2023 ம் தேதி இவ்வழக்கின் எதிரி ராஜா CRPF ல் பணிபுரிந்து வந்ததால், கைது பற்றிய விபரத்தை திண்டுக்கல், காவல் கண்காணிப்பாளர் மூலமாக CRPF தலைமை அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. 07.08.2023 ம் தேதி திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று அங்கு வழக்கில் இறந்துபோன புகழ்நாதனின் பிரேதத்தினை, பிரேத பரிசோதனை செய்த மருத்துவரிடம் கருத்துரை கேட்டு சான்று பெற்றேன். மேற்படி கருத்துரையில் மருத்துவரிடம் இரண்டு கேள்விகள் கேட்டதில்

<u>கேள்வி 1:</u>

கையால் அடித்து, கீழே தள்ளிவிட்டு விழுந்தால் வலது பொட்டுக்குழியில் காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா?

<u>கேள்வி 2:</u>

வலது பொட்டுக்குழியில் ஏற்பட்ட காயத்தினால் (Injury No. 9) இறப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதா?

என்ற கேள்விகளுக்கு கருத்துரை வழங்கினார். அவை பின்வருமாறு

Q1) Yes, Possible, The injury number 9 mentioned in the postmortem certificate would have been caused by blunt edge weapon or blunt force.

Q2) Yes, Possible. The injury number 9 mentioned in the postmortem certificate is sufficient the ordinary of nature to cause death.

07.08.2023 ம் தேதி முதல் நிலை பெண் காவலர் திருமதி. சுகன்யா என்பவர் வழக்கில் இறந்துபோன புகழ்நாதன் என்பவருக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவருக்கு உதவியாக இருந்து, வழக்கின் விசாரணைக்கு உதவியாக ஆய்வகத்திற்கு அனுப்ப இரத்த மாதிரிகள் எடுத்துக் கொடுத்ததை கண்ணாடி பாட்டிலில் முடிய நிலையில் இரத்தம் எடுத்த பாட்டிலை மருத்துவரின் ஆலோசனையின் பேரில் கொண்டு

வந்ததை படிவம் – 91ல் கைப்பற்றினேன். **மேற்படி படிவும் – 91 அ.த.சா.ஆ. 19 ஆக குறயீடு செய்யப்படுகிறது**. 21.08.2023 ம் தேதி படிவம் – 91 ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பி R.P.R.No. 98/2023 பெறப்பட்டது.

08.08.2023 ம் தேதி வழக்கின் சாட்சிகள் கீதா லோச்சனி, செந்தில்குமார், செல்வக்குமார், சரவணன் ஆகியோர்களை பிரிவு 164 கு.விமுசவின் படி வாக்குமூலம் பெறவேண்டி கனம் ஆத்தூர் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பினேன். 09.08.2023 ம் தேதி ஆத்தூர் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவின்படி சாட்சிகள் கீதா லோச்சனி, செந்தில்குமார், செல்வக்குமார், சரவணன் ஆகியோர்களை 164 வாக்குமூலம் பெற ஆத்தூர் நீதித்துறை நடுவரிடம் ஆஜர்படுத்தி வாக்குமூலம் பெறப்பட்டது. 14.08.2023 ம் தேதி இவ்வழக்கில் இறந்துபோன புகழ்நாதனின் பிரேத பரிசோதனையின்போது சேகரித்த உள்ளுறுப்புக்களை ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்க அரசு மருத்துவர் மூலமாக முதல் நிலை காவலர் 1018 திருமதி. சுகன்யா அவர்கள் மூலமாக வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். 22.08.2023 ம் தேதி இறந்துபோன புகழ்நாதனின் பிரேத பரிசோதனையின் போது கைப்பற்றப்பட்ட இரத்த மாதிரியை ஆய்வகத்திற்கு அனுப்பி சான்று பெற வேண்டி, ஆத்தூர் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு கடிதம் மூலமாக முதல் நிலை பெண் காவலர் 1018 திருமதி. சுகன்யா மூலம் அனுப்பி வைத்தேன். 21.08.2023 ம் தேதி ஆத்தூர் நீதிமன்றம், தலைமை எழுத்தர் திருமதி. ராணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 23.08.2023 ம் தேதி முதல் நிலை பெண் காவலர் 1018 திருமதி. சுகன்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 28.08.2023 ம் தேதி மதுரை, தடய வட்டார அறிவியல் ஆய்வகம் சென்று உதவி இயக்குநர், RFSL அவர்களிடம் சான்று (Viscera Report) பெற்று, விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.09.2023 ம் தேதி மதுரை, அறிவியல் ஆய்வகம் சென்று, அறிவியல் ஆய்வாளர் திரு. நவநீத கிருஷ்ணன் அவர்களிடம் சான்று (Blood Group) பெற்று, விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **மேற்படி அறிக்கை அ.த.சா.ஆ. 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

16.10.2023 ம் தேதி ரெட்டியார் சத்திரம் சென்று மேரி மருத்துவமனை மருத்துவர் திருமதி. சரஸ்வதி அவர்களை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். 16.10.2023 ம் தேதி திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்று இறந்துபோன புகழ்நாதனை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. தௌசிப் அகமது அவர்களிடம் சான்று பெற்றும், Post mortem Repot, Final Opinion பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 17.10.2023 ம் தேதி வழக்கின் விசாரணையை முடித்து எதிரி ராஜா மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 304(ii) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றதில் சமர்பித்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

எதிரியிடம் பெற்ற இந்த வழக்கின் ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டது என்று அசா. 9 மாயாண்டி சொல்லி உள்ளார் என்றால், அது தவறு. அசா. 10 ராஜேந்திரன் 08.06.2023 ம் தேதி அன்று தான் ஒப்புதல் வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது என்று சொல்லியுள்ளார் என்றால் அது தவறு. அவர் 06.08.2023 ஐ தவறாக சொல்லியுள்ளார். அசா. 13 மருத்துவர் திருமதி. சரஸ்வதி அவர்களிடம் மேரிஸ் தனியார் மருத்துவமனையில் இறந்த நபருக்கு செய்த முதலுதவி சிகிச்சை சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால், மருத்துவமனைக்கு வெளியிலேயே நாடித்துடிப்பை பார்த்துவிட்டு, நாடித்துடிப்பு குறைவாக இருந்தபடியால் மேல் சிகிச்சைக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார். அசா. 11 முதலுதவி செய்தது சம்மந்தமாக எந்த மருத்துவ ஆவணங்களும் நான் அவரிடம்

கைப்பற்றவில்லை என்றால் அது தவறு. விபத்து பதிவேட்டை அசா. 11 னிடம் கைப்பற்றி நீதிமன்றதிற்கு அனுப்பினேனா என்று கேட்டால், அனுப்பியுள்ளேன். அசா. 11 மருத்துவமனையில் தான் சம்பவம் நடந்த தினத்தன்று காலை, அசா. 2 சரவணன் இறந்த நபருடன் இருசக்கர வாகனத்தில் சிகிச்சைக்கு சென்றுள்ளார் என்றால், அவர் எனது விசாரணையில் அவ்வாறு குறிப்பிடவில்லை. ரெட்டியார் சத்திரத்தில் தனியார் மருத்துவமனை என்று குறிப்பிட்டு உள்ளார் என்றால் சரிதான். அது சம்மந்தமாக சிகிச்சை செய்த மருத்துவரை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கிற்கு மூலக்காரணமான அசா. 2 ன் சித்தி பேச்சியம்மாள் என்பவரை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அசா. 3 செல்வக்குமார், அசா. 4 ஜெயராணி ஆகியோரின் வீடுகள் இல்லை என்றால் சரிதான். 06.08.2023ம் தேதி அன்று நான் சாமி கும்பிடுவதற்காக குடும்பத்தினருடன் வெளியூருக்கு விடுப்பில் சென்றுவிட்டேன் என்றால் சரிதான். எனது சொந்த ஊர் மதுரைக்கு சென்று இருந்தேன். நான் 06.08.2023 முழுவதுமாக விடுப்பில் செல்ல அனுமதி கேட்டு இருந்தேன் என்றால் சரிதான். அந்த எழுத்து மூலமான காவல் துணைக் கண்காணிப்பாளரின் அனுமதி நகல், தற்பொழுது என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். மேற்படி ஒட்டன்சத்திரம், **காவல் துணைக் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை நகல் எ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதில் நான் மீண்டும் அன்றைய தினமே பணிக்கு வந்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

நான் சொன்னவாறு, சொன்ன இடத்தில் எதிரியை 06.08.2023ம் தேதி மாலை கைது செய்யவில்லை என்றாலும், அவரிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும் சரியல்ல. 06.08.2023ம் தேதி நான் இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்தவருக்கு ஏற்பட்ட 9வது காயம் வெளிப்புற

இரத்த காயம் கிடையாது என்று சொன்னால், அது உள்காயம் என்று மருத்துவர் குறிப்பிட்டு உள்ளார். எனது விசாரணையின்படி இறந்தவருக்கும், எதிரிக்கும் தள்ளு முள்ளு சண்டை ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரி ராஜா இறந்த நபரை கையால் அடித்து தள்ளிவிட்டுள்ளார். கையால் அடித்து தள்ளிவிட்ட பிறகு, எதிரி ராஜா மேற்படி இறந்த நபரை கீழே விழுந்த பிறகு மேற்கொண்டு தாக்கினாரா என்று கேட்டால், இல்லை. பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் அசா. 13 இறந்த நபருக்கு ஏற்பட்ட 9–வது காயம் Blunt edge Weapen or Blunt Force ஆல் ஏற்படும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். இந்த சிராய்ப்பு காயங்கள் மேற்படி இறந்த நபர் கீழே விழுந்ததினால் ஏற்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் பிரேத பரிசோதனை செய்த மருத்தவரை நான் நேரில் சந்தித்து விளக்கம் கேட்டேன் என்றால் சரிதான். எதிரிக்கு ஏற்பட்ட காயங்கள் சம்மந்தமாக அவரை பரிசோதனை செய்ய மருத்துவரிடம் அனுப்பினேனா என்று கேட்டால், அனுப்பினேன். எதிரிக்கு ஏற்பட்ட காயம் சம்மந்தப்பட்ட விபத்து பதிவேட்டை இந்த வழக்கில் தாக்கல செய்துள்ளேனா என்றால், இல்லை. எதிரிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. எதிரி எனது விசாரணையின்போது, காவல் நிலையம் வந்த பின்பு இந்த வழக்கு சம்மந்தமாக நடந்த சம்பவங்கள் குறித்தும் தான் தாக்கப்பட்டது குறித்தும், அவருக்கு எவ்வாறு காயங்கள் ஏற்பட்டது என்பது குறித்தும், என்னிடம் புகார் செய்தார் என்றால் இல்லை. எதிரி என்னிடம் புகார் மனு கொடுத்தார் என்றாலும், அதை நான் பதிவு செய்ய மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கு ஏற்பட்ட காயங்கள் தெரிந்து விட்டால், வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால், எதிரியின் சிகிச்சை மற்றும் மருத்துவம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் மறைத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் எதிரிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் அனைத்து பிரிவு 161(3) கு.வி.மு.ச. வாக்குமூலங்கள் கீழமை நீதிமன்றத்திற்கு 19.01.2024 ம் தேதி அன்று தான் அனுப்பப்பட்டு உள்ளது

என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக கீழமை நீதிமன்றத்தில் 17.10.2023 ம் தேதி தான் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் 19.01.2024 ம் தேதி தான் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த வழக்கு சம்மந்தமாக குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு கற்றறிந்த அரசு வழக்கறிஞரிடம் கருத்துரை பெறப்பட்டதா என்றால் பெறப்பட்டது. 03.11.2023 ம் தேதி அரசு வழக்கறிஞர் கருத்துரை வழங்கியுள்ளார் என்றால் சரிதான்.

ஏற்கனவே நானும், முதலில் விசாரணை அதிகாரியும் தயார் செய்த பிரிவு 161(3) கு.வி.மு.ச. வாக்குமூலங்கள் வழக்கிற்கு பாதகமாக இருந்தது என்பதால், அவை முழுவதுமாக மறைக்கப்பட்டு பின்னிட்டு 19.01.2024 ம் தேதி அன்று கணினி மூலம் தயார் செய்த வாக்குமூலங்கள் தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்றால் சரியல்ல. முதலில் தயார் செய்த பிரிவு 161(3) கு.வி.மு.ச. வாக்குமூலங்களில் எதிரிக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றியும், எதிரி தாக்கப்பட்டது பற்றியும் இருந்ததால், அவை முழுவதுமாக மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக கண்ணுற்ற சாட்சிகள் அசா. 2 முதல் அசா. 4 சாட்சிகள் என்னுடைய விசாரணையில் எதிரி இறந்தவரை கீழே தள்ளிவிட்டு, அதன் பின்னர் அடித்ததாக சொல்லவில்லை என்றால், அவ்வாறு குறிப்பிடவில்லை, ஆனால் எதிரி கையால் அடித்து கீழே தள்ளிவிட்டதாக குறிப்பிட்டு உள்ளார்கள். 07.08.2023 ம் தேதி அன்று எதிரி நான் தயார் செய்த காவல் அடைப்பு வேண்டுகோளின் மூலம் காவல் அடைப்பு செய்யப்பட்டார். நான் எதிரியை காவல் அடைப்பு செய்தபோது உடன் நான் சென்று இருந்தேன். காவல் அடைப்பு செய்த நீதித்துறை நடுவர், எதிரியை காயங்கள் சம்மந்தமாக விசாரித்தபோது, எதிரி தான் இறந்த புகழ்நாதன் என்பவரால் தாக்கப்பட்டதாகவும், அதனால் காயங்கள் ஏற்பட்டதாகவும் தெரிவித்து இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அசா. 3 தனது 164 கு.வி.மு.ச. வாக்குமூலத்தில் அசா. 4, அசா. 2 சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். பிரிவு 161(3) கு.வி.மு.ச வாக்குமூலத்தில் அவர்கள் இருந்ததாக சொல்லியுள்ளனர்.

அசா. 3 செல்வக்குமார் இறந்த நபரை எதிரி கீழே போட்டு கையால் குத்திக் கொண்டு இருந்ததாக பிரிவு 161(3) கு.வி.மு.ச வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆனால் கையால் அடித்து கீழே தள்ளிவிட்டதாக சொல்லியுள்ளார்.

நான் சொன்னவாறு சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் இயந்திர கதியில் எதிரி மீது ஒருதலை பட்சமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court on 18.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.